இணைப்பு I.

(..245—ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 264-க்கான விடையைக் காண்க.)

கோவில் நிலங்களைத் தனி நபர்கள் விவசாயத்திற்கு வைத்துக் கொள்வதற்கு உள்ள நில உச்ச வரம்பு, அதிகமாக வைத்திருக்கும் குத்தகையாளர்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை, திரும்பப் பெறப்பட்ட நிலங்கள் பற்றிய விவரங்கள்.

(அ) தமிழ்நாட்டு பொதுப் பொறுப்புக் கழகங்கள் (வேளாண் நிலங்களின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 57/61, பிரிவு 2 (6) இன்படி, கோவில் நிலங்களை, தனி நபர்கள் விவசாயத்திற்கு வைத்துக் கொள்ள வரையறுக்கப்பட்ட நில உச்சவரம்பு 5 ஏக்கர்கள் ஆகும்.

(ஆ) ஏதேனும் ஒரு குத்தகைதாரர், வரையறுக்கப்பட்ட உச்சவரம்புக்கு மேல் நிலம் வைத்திருந்தால், சட்டத்தின் கீழ் அதிகாரம் பெற்ற அலுவலர் சட்டப் பிரிவு 11 (2) இன் கீழ் விசாரணை நடத்தி, உச்சவரம்புக்கு மேல் அதிகமாக உள்ள நிலத்தை, சட்டப் பிரிவு 7 இன் கீழ், பொதுப் பொறுப்புக் கழகத்தின் நிலங்களுடன் சேர்த்து விடுவார். அவ்வாறு சேர்க்கப்படும் நிலம் தகுதியானவர்களுக்கு சட்டப் பிரிவு 8 இன் கீழ் குத்தகைக்கு விடப்பட வேண்டும். அவ்வாறு, எந்தப் பொதுப் பொறுப்புக் கழகமேனும், குறிப்பிட்டுள்ள காலத்திற்குள், அந்நிலத்தைக் குத்தகைக்கு விடாவிடில், அதிகாரம் பெற்ற அலுவலர் சட்டப் பிரிவு 12 அல்லது 14-ஏ இன் கீழ், அந்நிலத்தை குத்தகைக்கு விட நடவடிக்கை எடுப்பார்.

(இ) அதிகப்படியாக வைத்திருந்த குத்தகைதாரர்களிடமிருந்து திரும்பப் பெறப்பட்ட நிலங்கள் வருமாறு :—

	ஏக்கர்கள்.
தஞ்சாவூர்	2,888.43
திருச்சி	40.09
இராமநாதபுரம்	6.91
மற்ற மாவட்டங்கள்	இல்லை
மொத்தம் ..	2,935.43